www.Padasalai.Net www.TrbTnpsc.com

9 R

Reg. No. | | | | | | | |

# அரையாண்டுத் தேர்வு - 2022

## தமிழ்

நேரம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

பகுதி – I

15 x 1 = 15

அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. தமிழ்விடுதூது______என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. மரவேர் என்பது_____புணர்ச்சி. அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்
3. நச்சிலைவேல் கோத்கோதைநாடு, நல்யானைக் கோக்கிள்ளிநாடு – இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே
   அ) பாண்டிய நாடு, சேரநாடு ஆ) சோழநாடு, சேரநாடு இ) சேரநாடு, சோழநாடு ஈ) சோழநாடு, பாண்டிய நாடு
4. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று______
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு
5. பூவாது காய்க்கும், மலர்க்கை அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
   அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப்பெயரெச்சம், உருவகம் இ) வினையெச்சம், உவமை
   ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
6. திரா இடும்பை தருவது எது?
   அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம் இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை
7. "மிசை" என்பதன் எதிர்ச்சொல் என்ன? அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை
8. இந்திய தேசிய இராணுவத்தை_____இன் தலைமையில்_____உருவாக்கினர்.
   அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர் இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்
9. பொருத்தமான விடையைத் தேர்க.
   அ) கரிக்கையூர் – கோத்தகிரி ஆ) கல்லூத்துமேட்டுப்பட்டி – உசிலம்பட்டி இ) சித்திரக்கல் புடவில் – மயிலாடும்பாறை
   i) அ, ஆ ii) ஆ, இ iii) அ, ஆ, இ iv) அ, இ
10. கல்வி இல்லாத பெண்கள் எந்த நிலத்திற்கு சமமானவர்கள்? அ) கழனி ஆ) செம்மண் இ) உவர் ஈ) பாலை
11. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு______
   அ) தேசிய திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு இ) மூன்றும் சரி ஈ) தேசியத் திறனறி கல்வி உதவித்தொகை தேர்வு

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

காடெல்லாம் கழைக்கரும்பு தூவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் தெருங்குவளை
கோடெல்லாம் மட அன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர் நாடு தனை ஒவ்வா நலமெல்லாம்.

– சேக்கிழார்

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது? அ) குடும்ப விளக்கு ஆ) பெரியபுராணம் இ) தொல்காப்பியம் ஈ) சீவகசிந்தாமணி
13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
14. இப்பாடலில் பயின்று வந்துள்ள மோனைச் சொற்களை எழுதுக?
15. இப்பாடலில் பயின்று வந்துள்ள அடிஎதுகைகளை எழுதுக?

பகுதி – II பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (21–வது வினா கட்டாயமாக விடையளிக்கவும்)

4 x 2 = 8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
   அ) மீனா கனகாம்பரத்தைச் சூடினாள் ஆ) தமிழர்களின் தொன்மையான விளையாட்டு ஏறுதழுவுதல்
17. "டெல்லி நோக்கிச் செல்லுங்கள்" என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?
18. நடுகல் என்றால் என்ன?
19. கருக்கொண்ட பச்சைப்பாம்பு எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?
20. மூவாது மூத்தவர், நூல்வல்லலார் – இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக?
21. 'சுழன்றும் ஏர்ப்' _____எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 x 2 = 10

22. சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை விளக்குக. மாணவர்கள் மடிக்கணினி கல்லூரி புத்தகம்
23. கலைச்சொற்கள் தருக : அ) Literature ஆ) Download
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக : 1) இறைஞ்சி
25. வல்லினம் மிகா இடங்களில் எவையேனும் இரண்டினைக் கூறுக?
26. ஆகுபெயர் என்றால் என்ன?
27. இடைச்சொற்கள் எவற்றைச் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன?
28. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

என் ஆசிரியர் நீ நன்றாகப் படிக்கிறாய் எம்.ஐ.டி யில் வானூர்திப் பொறியியல் என்னும் துறையை எடுத்துப் படி என்று அறிவுரை கூறினார்.

பகுதி – III பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6

29. முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாது?
30. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக?
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக் கோவில்களில் சிற்ப வேலைபாடுகள் நிறைந்துள்ளன. அவற்றைத் திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் கோவில்களில் காணலாம்.
அ) யார் காலத்தில் குகைக்கோவில்களில் சிற்பவேலைப்பாடுகள் நிறைந்திருந்தது?
ஆ) இவ்வகைக் குகைக் கோவில்கள் அமைந்துள்ள இடங்களைக் கூறுக?
இ) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக?

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6
(34–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

32. ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார்?
33. 'என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?
34. "சொல் அரும்" எனத் தொடங்கும் சீவகசிந்தாமணி பாடலை எழுதுக? (அல்லது)
"சல்லடை பிறந்த ஆறும்" எனத் தொடங்கும் இராவணகாவியம் பாடலை எழுதுக.

பிரிவு – 3


எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6

35. பண்பாகுபெயர், தொழிலாகுபெயர் விளக்குக.
36. தன்வினை, பிறவினை – எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக?
37. குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் – இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25

38. அ) ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக. (அல்லது) ஆ) மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளை விளக்குக?
38. அ) ஏகதேச உருவக அணியை சான்றுடன் விளக்குக. (அல்லது)
ஆ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை – இக்குறட்பாவில் பயின்றுள்ள அணியை விளக்குக?
40. காட்சியைக் கண்டு கவிஞற எழுதுக?



41. பாநயம் பாராட்டுக.

கல்லும் மலையும் குதித்து வந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன் ;
எல்லா விரிந்த சமவெளி – எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் – பல
ஏரி குளங்கள் நிரம்பிவந்தேன் ;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் – மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்

– கவிமணி

42. அ) Aruna : Hi Vanmathi, It's great to see your after a long time.
Vanmathi : It's great seeing you. How long has it been? It must to more than 6 months. I'm doing good. How about you?
Aruna : Fine. I have come with my parents. They are inside the grocery shop. What about you?
Vanmathi : I came with my father. He has gone to buy tickets for a 3D movie.
(அல்லது) ஆ) என் பெற்றோர் மகிழுமாறு நான் செய்ய வேண்டிய செயல்கள் ஐந்தினைக் கூறுக?

பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 8 = 24

43. அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இணைய வழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக? (அல்லது)
ஆ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக?
44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் விளக்குக. (அல்லது)
ஆ) 'எங்கள் ஊர்ச் சந்தை' – என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்று எழுதுக.
45. அ) நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு 'மதிப்புரை' எழுதுக? (அல்லது)
ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி இருபது படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு விஜயா பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக?



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com